காலை முரசு
பக்கங்கள் - 25

# யாழில் ரயிலில் இருந்து இறங்க முற்பட்ட பெண் தவறி வீழ்ந்து மரணம்!

யாழ். சாவகச்சேரியில் ரயிலில் இருந்து இறங்க முற்பட்ட குடும்பப் பெண் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று கொழும்பில் இருந்து 04▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 31 வெள்ளிக்கிழமை 17.10.2025 | அதிர்வு 78

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி - தமிழ் மக்கள் பேரவை இடையிலான

# கொள்கைக் கூட்டு அவுட்?



(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர் எதிராகவும், தனித் தனியாகவும் எதிர்கொண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய தமிழ் மக்கள் 03▶



# உடன்பாட்டிலிருந்து விலகுகிறது சங்கு!

## கஜேந்திரகுமார் சீற்றம்

(ந.லோகதயாளன்)

"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்கு சின்னக் கட்சி) பதவிகளைக் கைப்பற் றுவதற்காக எமது உதவிகளைப் பெற்று விட்டு, செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் இப்போது 13 ஆம் திருத் தம் சம்பந்தமாக கூட்டங்கள் வைப்பது தாங்க ளாக ஒப்பந்தத்தில் 03▶



# '13'ஐ அமுல்படுத்த வலியுறுத்துவோம்!

## சுரேஷ் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)

"1988 ஆம் ஆண்டு எவ்வாறு 13 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அதிலிருக்கக்கூடிய அனைத்து அதிகாரங்களும் மீளவும் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்என்பதும் எமது கருத்தாகும். அதை வலியுறுத்துவோம். மாகாண சபை தொடர்பில் மிகப் 04▶






சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதனுக்கு இது மேலும் போதாத காலம் போலும்.

'நுணலும் தன் வாயால் கெடும்' என்பர். அதுபோல வாயை வைத்து வங்காளம் செல்லலாம் எனப் புறப்பட்ட அர்ச்சுனா இராமநாதன் இப்போது தமது வாயாலேயே நெருக்கடிக்கு மேல் நெருக்கடி எதிர்கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே தமது அரசியலுக்கு வெளிநாட்டிலிருந்து வாரி வழங்கிய ஆன்ட்டிமாருக்கு தமது வாயால் 'நல்லதோர்'(?) சான்றிதழ் கொடுத்திருக்கிறார் அவர் - புலம்பெயர்ந்த நம் தமிழர்களின் குழந்தைகளின் தந்தைமார் யார் என்ற அவரது வெறித்தனமான உளறல் மூலம்.

அவரது 'அந்தச் சான்றிதழ்' உண்மை என்று உணரும் ஆன்ட்டிமார் இன்னும் - தொடர்ந்தும் - அவருக்கு நிதி உதவி கொடுத்து உதவுவார்கள் என்று நினைக்கிறேன்.

அது ஒரு புறம் இருக்க, இலங்கை 02▶



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் பல நீதிமன்ற வழக்குகளை எதிர் கொண்டிருக்கும் அவருக்கு கடந்த இரண்டு தினங்களில் மற்றொரு நெருக்கடியான வழக்கு வந்திருக்கின்றது.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக நாட்டின் குடிவரவு, குடியகல்வு ஆணையாளர் நாயகமாக இருந்தவர் மீதே வழக்கு தொடுத்து, அந்த வழக்கில் குற்றஞ்சாட்டும் பொறுப்பையும் ஏற்று வாதிட்டு, அந்த உயர் அதிகாரியின் பதவியைப் பறித்து, மூன்று வருடங்கள் சிறைக்கு அனுப்பிய தீர்ப்பை உயர்நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனிடம் அவர் சிக்கி இருக்கின்றார்.

மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வது தொடர்பில் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார் சுமந்திரன்.

இது தொடர்பில் வேறு வழக்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டி உள்ளது.

தெல்லிப்பளை மருத்துவமனை மருத்துவப் பணிப்பாளரின் நிர்வாகச் சீர்கேடுகளை ஆட்சேபித்து சில மாதங்களுக்கு முன்னர் அங்கு உள்ள வைத்தியர்கள் ஒரு மணி நேரம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு ஆஸ்பத்திரி முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். பொதுமக்களும் அதில் கலந்து கொண்டனர்.

இப்படி நடந்து கொண்டதன் மூலம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் குற்றத்தையும் தவறையும் சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் இழைத்துள்ளனர் என்று தெரிவித்து தெல்லிப்பளை வைத்தியசாலையின் பணிப்பாளர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அவருக்கு மேலதிகமாக பொதுமகன் என்ற பெயரில் முஸ்லிம் நபர் ஒருவரும் பொலிஸில் புகார் செய்திருந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் மேற்படி வைத்தியர்கள் ஒரு மணி நேரம் பணியை இடை நிறுத்தி தங்கள் எதிர்ப்பை தொழிற்சங்க ரீதியில் வெளிப்படுத்திய போது அவர்களோடு வீதிக்கு வந்து வைத்தியசாலைப் பணிப் பாளரும் நின்றார். படங்களும் எடுத்துக் கொண்டார். பின்னர் அவரே போய் வைத்தியர்களின் நடவடிக்கையால் மக்களின் அத்தியாவசிய மருத்துவ சேவை பாதிக்கப்படும் குற்றமிழைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்தார்.

அந்த முறைப்பாட்டின் மீது மூன்று வைத்திய நிபுணர்கள் உட்பட ஐந்து மருத்துவர்களை நீதிமன்றத்துக்கு வர பொலிஸார் நீதிமன்றம் மூலம் அழைப்பாணைக்கு வழி செய்தனர்.

இதற்கு எதிராக ஐந்து மருத்துவர்கள் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு கடந்த செவ்வாயன்றும் புதனன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அச்சமயம் எதிர்த்தரப்பில் சம்பந்தப்பட்ட முறைப்பாட்டாளர்கள் தரப்பில் முன்னாள் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஆஜரானார். அந்த மட்டத்தில் எதிர்த்தரப்புக்கு செல்வாக்கு இருந்தது.

இதே சமயம் அந்த மருத்துவர்களுக்கு எதிராகவும் தெல்லிப்பளை வைத்தியசாலை பணிப்பாளருக்கு ஆதரவாகவும் மருத்துவர் அர்ச்சனா இராமநாதன் நாடாளுமன்றத்தில் தவறான கருத்துக்களை தெரிவித்தார் என்றும் அந்த மனுவின் மீது வாதாடுகையில் சுமந்திரன் மன்றில் குறிப்பிட்டார்.

அரசுத் தரப்பில் ஆஜரான அரசு சட்டத்தரணி, மேற்படி ஐந்து மருத்துவர்களும் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களாக அழைக்கப்படவில்லை என்றும், அப்படி அழைக்கப்பட மாட்டார்கள் என்றும், அவர்களிடம் வாக்குமூலம் பெறுவதற்காகவே நீதிமன்ற மூலம் அழைப்பாணை விடுக்கப்பட்டது என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதனடிப்படையில் மல்லாகம் நீதிமன்ற விசாரணைகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதிக்க மறுத்து விட்டது.

இந்த நிலையில் இந்த மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கையொட்டி சுமந்திரன் தரப்பைக் கடுமையாக விமர்சித்து தம்பாட்டில் வழமை போல இணையத்தில் வீடியோ காணொலி ஒன்றை வெளியிட்டார் அர்ச்சுனா இராமநாதன்.

அதில் சுமந்திரன் தரப்பின் வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டு விட்டது என்ற அடிப்படையில் பல தப்பும் தவறுமான கருத்துக்களை - செய்திகளை - அவர் வெளியிட்டார் என்று கூறப்படுகின்றது.

அதனை, இது தொடர்பான வழக்கு நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் எடுத்து துக் கொள்ளப்பட்ட போது அங்கு சுட்டிக்காட்டினார் சுமந்திரன். மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கைத் தவறாக அர்த்தப்படுத்தி, நடக்காத விடயங்களை நீதிமன்றத்தில் நடந்ததாகக் காணொலிச் செய்தி வெளியிட்ட அர்ச்சுனா இராமநாதனை நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தான் நிறுத்த நடவடிக்கை எடுப்பார் என்பதை மல்லாகம் நீதிமன்றத்தில் பகிரங்கப்படுத்தினார் சுமந்திரன்.

மேற்படி ஐந்து மருத்துவர்களும் வாக்குமூலம் அளிப்பதற்காகவே அழைக்கப்பட்டார்கள் என்று மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் சுட்டிக்காட்டி, அவர்களை விடுதலை செய்யலாம் என்று கூறிய போது மன்றில் சீறிப் பாய்ந்தார் சுமந்திரன்.

குற்றம் இழைக்காத - சந்தேக நபர் இல்லாத - யாரையும் நீதிமன்றுக்கு அழைப்பாணை கொடுத்து அழைக்க முடியாது என்பதை சுட்டி காட்டிய சுமந்திரன், வாக்குமூலம் பதிவதற்காகவே ஐந்து மருத்துவர்களையும் நீதிமன்றுக்கு அழைத்ததாக கூறிவிட்டு, அவர்களை சந்தேக நபர் மாதிரியோ, எதிரியாகவோ கருதி 'விடுதலை செய்வது' என்ற கருத்தை பொலிஸார் எப்படிக் கூற முடியும் என்று சுமந்திரன் கேள்வி எழுப்பினார். அப்படி கூறியமைக்காக பொலிஸார் மன்னிப்புக் கோரியமையுடன் ஐந்து மருத்துவர்களும் இந்த வழக்குத் தொடர்பில் நீதிமன்றம் இனி அழைத்தாலே தவிர வழக்குக்கு வரத் தேவை இல்லை என்பதையே தாங்கள் அப்படி குறிப்பிட்டார்கள் என்று கூறிச் சமாளித்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்ற விடயங்கள் பற்றி சரியாகத் தெரியாமல் பகிரங்கக் காணொலி வெளியிட்ட அர்ச்சுனா இராமநாதன், தமது நாடாளுமன்ற உரைக்கு கிடைக்கும் விசேட சிறப்பு உரிமை என்ற காப்புரிமை இத்தகைய காணொலிக்கும் இருக்கும் என்று எண்ணத்தில் அப்படி பேசி விட்டார் என்று நினைக்கிறேன்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பல சமயங்களில் காலைச் சுற்றிய பாம்பு. அது எப்போது கொத்தும் என்பது பல சமயங்களில் அந்த காலுக்கு உரியவர்களுக்குத் தெரிவதில்லை.

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு விசாரணையில் இந்த விவகாரத்தை ஒட்டி நாடாளுமன்றத்தில் அர்ச்சுனா இராமநாதன் ஆற்றிய கருத்துக்கள் குறித்து சுமந்திரன் விவரித்த போது அதனை நீதியரசர்கள் முகத்தைச் சுழித்து, உள்வாங்கிய முறைமையிலேயே அர்ச்சுனா இராமநாதனுக்கு நல்ல காலம் இல்லை என்பது ஓரளவு தெளிவானதாக நீதிமன்ற செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இனிமேல்தான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் ஆழம், தாக்கம் அர்ச்சுனா இராமநாதனுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

எல்லா மரங்களையும் கொத்தும் மரங்கொத்தி கடைசியில் வாழையில் போய்க் கொத்தி /குத்தி மாட்டிக் கொள்வது பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்கள் தானே....!

இந்த இரண்டு வழக்குகளிலும் இன்னொரு சுவாரஸியமான விடயமும் உள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாம் தாக்கல் செய்த வழக்கின் விசாரணை முடியும் வரை ஐந்து மருத்துவர்கள் தொடர்பான மல்லாகம் நீதிவான் நீதிமன்ற விசாரணைகளை இடைநிறுத்தும் படி உத்தரவிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தை சுமந்திரன் கோரியிருந்தார்.

ஆயினும், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஐந்து மருத்துவர்களும் குற்றவாளிகளாகவோ, சந்தேக நபர்களாகவோ நிறுத்தப்படாமல், ஆக வாக்குமூலம் அளிப்பதற்கான தரப்பாக மாத்திரமே அழைக்கப்பட்டுள்ளனர் என்று அரச சட்டத்தரணி வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில், அத்தகைய தடை உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டு நீதிமன்றம் அதை வழங்கவில்லை. அப்படி நீதிமன்றம் வழங்காத விடயத்தையே வழக்கு முழுமையாக முடிந்து விட்டது என்பது போல அர்ச்சுனா இராமநாதன் தாறுமாறாகக் கருத்து வெளியிட்டு சொதப்பியிருந்தார்.

ஆனால், சுமந்திரனின் வாதத் திறமையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பெற முடியாத உத்தரவை அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் கடைசியாகப் பெற்றுக் கொண்டு விட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை முடியும் வரை - மேன்முறையீட்டு நீதிமன்றம் ஓர் உத்தரவை வழங்கும் வரை - மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரிப்பது இல்லை என்று மல்லாகம் நீதிவான் நேற்று உத்தரவு வழங்கி விட்டார்.

ஆக அர்ச்சுனா இராமநாதன் பாவம். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சுமந்திரனுக்கு சார்பான முழு உத்தரவு கிடைக்கவில்லை என்ற தவறான அர்த்தப்படுத்தலோடு கண்மண் தெரியாமல் விமர்சித்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அவர் சம்பாதித்துக் கொள்ள, மறுபுறத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கிடைக்க வேண்டிய உத்தரவை மல்லாகம் நீதிமன்றத்திலேயே சுமந்திரன் பெற்றுவிட்டார்...!

## உடன்பாட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து விலகும் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம்.”

– இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது கூறினார்.

இந்த விடயம் தொடர்பிலும், மாகாண சபைத் தேர்தலைத் தமிழ்க் கட்சிகள் அணுகும் முறைமை சம்பந்தமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நடத்தி வரும் கூட்டங்கள் தொடர்பிலும் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

“கூட்டத்தை நடத்தியது தமிழ்க் கட்சிகள் அல்ல. அது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே நடத்தியது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகள் கூடி மாகாண சபையை வைக்க வேண்டும் என்பது தொடர்பிலும், அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் கதைத்துள்ளனர்.

நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக ஒற்றையாட்சி முறைமைக்குள் தமிழ் அரசியல் நடத்த அறவே இடமில்லை என்பதனை எழுத்து மூலமாக தெளிவாக வலியுத்தி வந்துள்ளோம். அது மட்டுமன்றி, 13 ஆம் திருத்தம் இறுதித் தீர்வும் அல்ல, ஏக்கிய இராச்சிய யோசனை நிராகரிக்கப்பட வேண்டும் என்ற இரண்டும் ஒப்பந்தத்தில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு இணங்கி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் அனைவரும் ஒப்பமிட்டனர். அதற்குப் பிறகு உள்ளூராட்சி சபையில் எங்களோடு இணைந்து, நாங்கள் விட்டுக் கொடுப்புகளைச் செய்து அவர்களுக்குப் பதவிகளைக் கொடுத்த பின்பு, நன்மைகளை பெற்ற பிறகு, எம்மோடு ஒப்பந்தம் செய்திருக்காது விட்டால் அவர்கள் எந்தவொரு சபையிலும் பதவிகளை எடுத்திருக்க முடியாது. தவிசாளர் பதவிகளையும் பெற்றிருக்க முடியாது, அப்படிப் பதவிகளைபெற எமது உதவிகளைப் பெற்று விட்டு, இப்போது செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் அவர்கள் இந்த நேரத்தில் 13 ஆம் திருத்தம் சம்பந்தமாக கூட்டங்கள் வைப்பது தாங்களாக ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகத்தான்நாங்கள் பார்க்கின்றோம்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் ஒரு மாதத்துக்கு முன்பதாக – நான் வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கு முன்னர் – அதாவது, 13 ஆம் திருத்தம் தொடர்பில் அவர்கள் திருகோணமலையில் நடத்திய சந்திப்புக்கு முன்பே தெளிவாக இந்த விடயத்தை – 13 ஆம் திருத்த விடயத்தில் ஈடுபட்டால் ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகவே நாம் பார்ப்போம் – என்பதை நாம் அவர்களிடம் சொல்லியிருந்தோம்.

13 ஆம் திருத்தத்தைப் பற்றி தொடர்ந்தும் கதைத்துக் கொண்டிருப்பது என்பது அந்த ஏக்கிய இராச்சிய அரசமைப்பை எதிர்க்க வேண்டிய பொது மக்களை செயற்படுத்தாமல் திசை திருப்பி ஏக்கிய இராச்சிய அரசமைப்பை தமிழ் மக்களுடைய அனுமதியுடன் ஆதரவோடு நிறைவேற்றுவதற்கு துணை போகின்ற செயலாகவே பார்க்கின்றோம்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியகே கூட்டணியின் பங்காளிகள் மாகாண சபை தேர்தலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கதைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளே தமிழ் அரசியலை நகர்த்த முடியாது என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருடனான எமது எழுத்து மூலமான ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

13 ஆம் திருத்தம் இறுதித் தீர்வல்ல. ஏக்கிய இராச்சிய யோசனை ஒரு தீர்வல்ல. இரண்டும் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை எழுத்து மூலமாகப் பதிவு செய்திருந்தோம்.

அதற்குப் பிறகு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் அனைவரும் உள்ளூராட்சி சபைகளில் இணைந்து விட்டுக் கொடுப்புகளை செய்து பதவிகளை – சபைகளைக் கொடுத்த பிறகு 13 ஆம் திருத்தம் தொடர்பிலும் மாகாண சபை தொடர்பிலும் பேசுகின்றனர்.

அரசு புதிய அரசமைப்பை எல்லாம் கொண்டு வரப் போவது கிடையாது. இருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்தி, எங்களுடைய செயற்பாடுகளை நாம்தான் முன்னெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அதையும் இல்லாது செய்யும் அரசாகவே இது இருக்கின்றது. ஆகவே அந்த ஒப்பந்தத்தை மீறுகின்ற நோக்கத்தோடு இதனைச் செய்யவில்லை என ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியினர் எமக்குத் தெரிவித்தனர்.

அப்போது நான் சொன்னேன். அரசு தெளிவாக பிரதமர், ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் என முக்கியமான தரப்புகள் உத்தியோகபூர்வ வாக்குறுதிகளை வழங்கி இருக்கின்ற இடத்ததில் நாங்கள் இவ்வாறு செயற்பட முடியாது என்றேன்.

இந்த 13 தொடர்பான கூட்டங்களை நடத்துவதன் சூத்திரதாரி சுரேஷ் பிரேமச்சந்திரனே. சுவிர்ஸலாந்தில் நடந்த சந்திப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் பிரதிநிதியாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்துகொண்ட வேளையில், புதிய அரசமைப்பைக் கொண்டு வரப்போவதாக அப்போது தெளிவாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது.

அரசிடம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு மேலதிகமாக இருக்கும் போது ஒருதலைப்பட்சமாக எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்தக் கூடிய சூழலில் அரசு இவ்வாறான பதிலைச் சொல்லி இருப்பதன் பின்னணியில், 13 ஆம் திருத்தத்தைப் பற்றி தொடர்ந்தும் கதைத்துக் கொண்டிருப்பது என்பது அந்த ஏக்கிய இராச்சிய அரசமைப்பை எதிர்க்க வேண்டிய பொதுமக்களை செயற்படுத்தாமல் திசை திருப்பி ஏக்கிய இராச்சிய அரசமைப்பைத் தமிழ் மக்களுடைய அனுமதியுடன் ஆதரவோடு நிறைவேற்றுவதற்குத் துணை போகின்ற செயலாகவே பார்க்கின்றோம்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு நாங்கள் வலியுறுத்துவது தயவு செய்து எமது மக்களுக்கு மோசமான செயலைச் செய்யாதீர்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தான் உருவாக்கிய ஏக்கிய இராச்சிய வரைவை தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தனித்து அழுத்தங்களைக் கொடுத்து எதிர்க்காமல் பண்ணுவதற்குரிய வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாவது அதை எதிர்த்து செயற்பட வேண்டும்.

சுமந்திரன் போன்ற தரப்புகளுக்கு துணை போகின்ற வகையில் ஏக்கிய இராச்சிய வரைவை நிறைவேற்றுவதற்குச் செயற்படக்கூடாது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனோ – தமிழ்த் தேசியப் பேரவையுடனோ ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பயணிக்க விருப்பமில்லாவிடின் பகிரங்கமாக வெளியேற முடியும். நாம் தவறாக நினைக்கப் போவதில்லை. கொள்கையில் நாம் உறுதியாக உள்ளோம்.

இதற்குப் பிறகும் 13 பற்றி மக்கள் மத்தியில் கொண்டு போய் கருத்தை விதைக்கின்றது என்பது முழுக்க முழுக்க சுமந்திரன் உருவாக்கிய அரசியல் வரைவைக் கொண்டு ஒற்றையாட்சிக்குள் முடக்குகின்ற நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போகின்ற – உண்மையாக ஒத்துழைக்கின்ற – செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

38 வருடங்களாக நடைமுறையில் இல்லாத அரசமைப்பு விவகாரத்தை நடைமுறைப்படுத்தக் கேட்கின்றோம் என்று சொன்னால் எந்தளவு தூரத்துக்கு அது பிரயோசனமற்றது என்பது அந்தக் கோரிக்கையிலே வெளிவருகின்றது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கவில்லை. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் இருக்கக்கூடிய அம்சத்தை தீர்வாக நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் ஒற்றையாட்சியைத் தாண்டிய ஒரு சமஷ்டி ஆட்சியூடாக மட்டும்தான் நடைமுறைப்படுத்த முடியும். இந்தியா தொடர்ந்தும் 13 ஆம் திருத்தத்தை பற்றி கதைப்பது என்பது அர்த்தமற்ற கருத்தாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்.” – என்றார்.

## 26 ஆம் திகதி வட மாகாணம் பகல் முழுவதும் மின் வெட்டில்!

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை யாழ்குடா நாடு முழுவதும் மற்றும் முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டம் முழுவதும் மின் விநியோகம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

வவுனியா – மன்னார் இடையேயான 220 கே.வி. மின் பரிமாற்ற வடத்தை மாற்றி அமைப்பதற்கான வேலைகளுக்காக வடமாகணத்திற்கான 132 கே.வி. வவுனியா – புதிய அநுராதபுர மின் பரிமாற்ற கட்டமைப்பு நிறுத்தப்படுவதால் இந்த மின் துண்டிப்பு என மின்சார சபை அறிவித்துள்ளது



# விபத்தில் காயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் முதலாம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த கந்தசாமி விசுவலிங்கம் (வயது 74) என்பவராவார்.

மேற்படி வயோதிபர் கடந்த 14 ஆம் திகதி முற்பகல் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மஞ்சள் கோட்டு பகுதியால் வலது பக்கம் திருப்ப முற்பட்ட போது பின்னால் வந்த வாகனம் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில், மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை முள்ளியவளைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

---

## கொள்கைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையும், பின்னர் உள்ளூராட்சி நிர்வாகங்களைக் கைப்பற்றுவதற்காக தமக்கு இடையில் இணக்கம் கண்ட பின்னர், 'கொள்கைக் கூட்டு' என்று அறிவித்த கூட்டுச் செயற்பாடு பெரும்பாலும் முடிவுக்கு வருவதாகத் தெரிகின்றது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பின்னர் சில உதிரித் தரப்புகளையும் சேர்த்துக் கொண்டு 'தமிழ் மக்கள் பேரவை' என்று அமைப்பின் பெயரில் உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொண்டது. தேர்தலின் பின்னர் வடக்கு, கிழக்கில் சில உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களைக் கைப்பற்றும் எண்ணத்தோடு, தமிழ் மக்கள் பேரவை, சங்கு சின்னத்தில் போட்டியிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் தேர்தலின் பின்னான கூட்டு ஒன்றை அமைத்தது. அது 'கொள்கைக் கூட்டு' என்று பெருத்த எடுப்பில் இரு தரப்புகளாலும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்தும் விடயங்களைக் கையாள்வது தொடர்பில் இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான 'கொள்கை கூட்டு' முடிவுக்கு வருவதாகத் தெரிகின்றது.

இது தொடர்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரனும் தெரிவித்த கருத்துக்கள் இந்தக் கூட்டு பெரும்பாலும் முடிவுக்கு வருவதை உறுதிப்படுத்துகின்றன.

இருவரின் கருத்துக்களும் தனித்தனியாக இங்கு பிரசுரமாகியுள்ளன.

---

## '13'ஐ அமுல்படுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஓர் ஒற்றுமைப்பாடும் ஒருமித்த கருத்துக்களும் இருக்கின்றன. இவற்றை நாங்கள் இன்னும் ஒருவரும் மிகுதி இல்லாமல், அனைவரையும் இணைத்துக்கொண்டு செல்லும் முயற்சியாகத்தான் கலந்துரையாடல் நடைபெற்றது."

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் விபரம் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலே ஒரு தொடர் கருத்தரங்குகளை வடக்கு, கிழக்கில் நடத்தி வருகின்றது. தமிழர் தரப்பில் இருக்கக் கூடிய ஏனைய தரப்புக்களும் இதற்குள் வந்து இணைய வேண்டும் என்பது எமது எல்லோரதும் விருப்பம். அது, தமிழ் அரசுக் கட்சியாக இருக்கலாம் அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கலாம். ஏனைய கட்சிகளாக இருக்கலாம். இவர்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு போக வேண்டும் என்பதில் எங்களுக்குள் ஒருமித்த கருத்து இருக்கின்றது.

ஏற்கனவே வவுனியாவில் இடம்பெற்ற கருத்தரங்கில் எம்.ஏ.சுமந்திரன், ப.சத்தியலிங்கம் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் மாகாண சபைத் தேர்தல், மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பாக ஒரு ஒருமித்த கருத்தில் இருக்கின்றார்கள் என்பது தெளிவானது. இருந்தபோதும் ஒரு கூட்டாக வடக்கு, கிழக்கில் மாத்திரம் அல்லாமக் ஏனைய பிரதேசங்களிலும் முன்னெடுத்துக் கொண்டு போக வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் அரசு தேர்தலை நடாத்தாமல், மாகாணங்களுக்குள் எல்லைகளைப் பிரித்து, அதற்குப் பின்பு தான் தேர்தல் என்ற ஒரு தொனி தொடர்ந்தும் இருந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு நடக்குமாக இருந்தால் தேர்தல் காலவரையின்றி பிற்போடலாம் என்ற ஓர் அச்சம் தமிழ் மக்கள் மத்தியிலும் இருக்கின்றது. ஆகவே இதனை மாற்றி, தேர்தலை குறைந்த பட்சம் வரும் வருடத்தின் ஆரம்பத்திலேனும் வைக்க வேண்டும்.

ஒதுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் – அதாவது 1988 ஆம் ஆண்டு எவ்வாறு 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அதிலிருக்கக் கூடிய அனைத்து அதிகாரங்களும் – மீளவும் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் எமது கருத்தாகும்.

இந்த அரசுக்கும் நாங்கள் ஒரு தெளிவான கருத்தைச்சொல்லியிருக்கின்றோம். ஜனநாயக ரீதியாக ஏற்கனவே இந்த நாட்டில் அரசியல் சாசனத்தில் இந்த அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. அதற்கான தேர்தல்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த மட்டில் கடந்த 7, 8 வருடங்களாக நடைபெறவில்லை. ஆகவே உடனடியாக அந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அந்த அதிகாரங்கள் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் வசம் கொடுக்கப்பட வேண்டும். அவை முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாங்கள் மிகத் தெளிவாக அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே அந்தவகையில் மிகப் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒரு ஒற்றுமைப்பாடும் ஒருமித்த கருத்துக்களும் இருக்கின்றன. இவற்றை நாங்கள் இன்னும் ஒருவரும் மிகுதி இல்லாமல் அனைவரையும் இணைத்துக்கொண்டு முன் நகர்த்தும் முயற்சியாகத்தான் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

தமிழ் மக்கள் கூட்டணியின் விக்னேஸ்வரனுடனும் பேச ஆலோசித்துள்ளோம்"

– என்றார்.




# செவ்வந்தியை மடக்கிப் பிடித்த விடயத்தில் கறுப்பு ஆடுகளுக்கும் தண்ணிகாட்டிய அநுர

கொழும்பு – அளுத்கடை நீதிமன்றத்துக்குள் பாதாளக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தியைக் கைது செய்வதற்காகப் பொலிஸ் அதிகாரி நேபாளத்துக்குச் செல்வதற்கு முன்னர், மிக இரகசியமான நடவடிக்கையொன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இரகசிய உத்தரவுக்கமைய பொலிஸ் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது:-

செவ்வந்தி நேபாளத்தில் இருக்கின்றார் என்ற விடயத்தை பொலிஸார் அறிந்த பின்னர், அவருடைய ஒவ்வொரு நகர்வுகளையும் நுட்பமாக அவதானித்து வந்துள்ளனர். இதையடுத்து, செவ்வந்தியைக் கைது செய்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான ரொஹான் ஒலுகல நேபாளத்துக்குச் செல்வார் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், இந்த விடயம் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டால், பொலிஸ் திணைக்களத்துக்குள் இருக்கும் பாதாளக் குழுக்களின் உளவாளிகள், தகவல்களை வழங்கிவிடுவார்கள் என்பதால் மிக இரகசியமான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, தனக்கு வைரஸ் காய்ச்சல் என்ற தோற்றப்பாட்டை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஹான் ஒலுகல ஏற்படுத்தியுள்ளார். ஆதலால், விடுப்பில் இருந்து சிகிச்சை பெறுவதைப்போன்று அனைவரையும் நம்பவைத்துள்ளார். இதைத் தொடர்ந்தே, அவர் நேபாளத்துக்குச் சென்றுள்ளார். நேபாளத்துக்குச் சென்ற பின்னரும், அவருடைய திறன்பேசிகள் உள்நாட்டில் இயங்கு நிலையில் இருந்துள்ளன. உச்சக்கட்ட அவதானத்துடன் இந்தத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்தே செவ்வந்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

### வெளிப்பட்ட புதிய தகவல்கள்

கொழும்பு – அளுத்கடை நீதிமன்றத்துக்குள் பாதாளக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், மத்துகம பகுதிக்குச் சென்ற செவ்வந்தி தனது முடியைக் கட்டையாக வெட்டிக்கொண்டு, ஆள் அடையாளத்தையும் மாற்றியுள்ளார். அதன்பின்னரே யாழ்ப்பாணம் வந்து இங்கிருந்து படகு மூலம் இந்தியா சென்றுள்ளார். சுபுன் என்பவரே அவரை காரில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். இந்தியாவில் இருந்து ரயில் மூலமே செவ்வந்தி நேபாளம் சென்றுள்ளனர். அங்கு தலைமறைவாகி இருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

### பொலிஸ் தடுப்புக் காவல்

இதேவேளை, நேபாளத்தில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட குழுவை 72 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வுட்லர் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

# கேரதீவில் பெருமளவு கஞ்சாவுடன் இருவர் கைது!

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேரதீவு பகுதியில், கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து 48 கிலோ 400 கிராம் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கொள்ளை போன கூட்டு!

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமியின் மகா வாக்கியங்கள் நான்கில் ஒன்று ‘எப்போவோ முடிந்த காரியம்.’

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உட்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் சில பிற உதிரித் தரப்புகளும் சேர்ந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவையும், சங்கு சின்னத்தை சுவீகரித்துக் கொண்ட ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியும் கொள்கைக் கூட்டு அமைத்த போது, அது நின்று, நிலைத்து, நீடிக்காது என்பது ‘எப்போவோ முடிந்த காரியமாக’ தீர்மானிக்கப்பட்டு விட்டது என்றுதான் அரசியல் அவதானிகள் கருதினர்.

அது இப்போது நிஜமாகி வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தலை எதிரும் புதிருமாக மோதலோடு எதிர்கொண்ட இக்கூட்டுகள் இரண்டும் தேர்தல் முடிவுகளின் பின்னர் தங்களுக்குள் கூட்டமைத்துக் கொண்டமை பதவிக்கானதே தவிர, கொள்கைக்கானது அல்ல என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்த விடயம்தான்.

13 ஆவது திருத்தத்தையும், மாகாண சபையையும், அதற்கான தேர்தல்களையும் பதவிகளை வேண்டி எதிர்கொண்டாலும், கொள்கை ரீதியில் அதை ஏற்க முடியாது என்று இரட்டை நாக்குத் தத்துவம் பேசும் சைக்கிள் கட்சியும், 13 ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபையையாவது கட்டிப்பிடித்திருக்க முடியாதா என்று ஏக்கத்தோடு நப்பாசை கொண்டிருக்கும் சங்குத் தரப்பும் ஒரு தடத்தில் பயணிப்பது என்பது அப்பட்டமான அரசியல் ஏமாற்றுதல் நடவடிக்கையன்றி வேறில்லை என்பது அப்போதே தெரிந்த விடயம்தான்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னான பதவிப் போட்டிக்கான - கதிரை ஆசைக்கான - தெரிவுகள் முடிந்து விட்டன. இனி என்ன? கொள்கை கூட்டு ‘கொள்ளைக் கூட்டு’ ஆகிப் போய்விட்டது. அவ்வளவுதான்.

சரியோ, பிழையோ மாகாண சபைகளை வலியுறுத்துவதிலும், 13 ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை வற்புறுத்துவதிலும், சங்கு கட்சி வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருப்பதாகவே தெரிகிறது.

ஒருபுறம், அதை எதிர்ப்பதாக காட்டிக் கொண்டு, அந்தத் தேர்தலில் வெற்றியீட்டி பதவிகளைப் பிடிப்பதற்காக சுவாமிமார்கள் வரை வரிசையாகச் சென்று தேடி சலாம் வைக்கிறது சைக்கிள் கட்சி.

அது மாத்திரமல்ல, நாய்க்கு கல்லெறிந்தால், கல்லு எங்கு பட்டாலும் காலைத் தூக்கிக் கொண்டு ஓடுமாம்.

அதுபோல, ‘சுமந்திரன் போபியா’ நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் சைக்கிள் கட்சிக்கும் சுமந்திரனை தாக்குவதுதான் எல்லாவற்றுக்கும். சுமந்திரனை எதிர்க்க வக்கற்று ‘ஏக்கிய ராஜ்ய’, ‘எக்க ரஜ‘ இடையேயான வேறுபாடு புரிந்தும், புரியாதது போல் அதை வைத்து பிதற்றித் திரியும் நோய்ப் பிதற்றல் அதற்குப் பற்றிக் கொண்டுள்ளது.

சங்குக் கூட்டு, பதிமூன்றாம் திருத்தத்தை வலியுறுத்துவதைக் கண்டிப்பதற்கும், சுமந்திரனும் ‘ஏக்கிய ராஜ்ய’ பிதற்றலும்தான் சைக்கிளுக்குக் கிடைத்திருக்கின்றது.

எதற்கெடுத்தாலும் சுமந்திரனை வைவதற்காக, மாகாண சபை தேர்தலையும் 13 ஐயும் சங்கு வலியுறுத்துவது கூட சுமந்திரனின் ‘ஏக்கிய ராஜ்ய’வுக்காகத்தான் என்று ‘மொட்டம் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும்’ அரசியல் வியாக்கியானம் வேறு சைக்கிள் தரப்பால் முன்னெடுக்கப்படுகிறது.

அவர்களின் இந்த பிதற்றல் புரியாமல் - புரிந்து கொள்ள முடியாமல் - சாதாரண தமிழ் மகன் தடுமாறுகிறான் என்பது மட்டும் உண்மை.



# ஆசிரியர்களின் இடமாற்றங்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்

## மேன்முறையீட்டுக் காலமும் நீடிப்பு
## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

ஆசிரிய இடமாற்றங்களில் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதும் எந்தவொரு ஆசிரியரும் மேன்முறையீடு செய்ய முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டுக் காலத்தை எதிர்வரும் 27ஆம் திகதிவரை நீடிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆசிரிய இடமாற்றங்களில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், ஆசிரிய இடமாற்றக் கொள்கையை முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் வடக்கு மாகாண ஆசிரியர்கள் சிலர் கடந்த சில நாள்களாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஆளுநர் நேற்றுமுன்தினம் நடத்தினார். இதன் போதே, இடமாற்றங்களால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எவரும் மேன்முறையீடு செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

ஆசிரியர்களால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவை தொடர்பில் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.











# மலேசியாவில் நடந்த அழகுக்கலை போட்டியில் சாதனை படைத்த பெண்கள் நாடு திரும்பினர்

மலேசியாவில் அண்மையில் நடைபெற்ற ஆசிய அழகுக்கலை மற்றும் சிகையலங்காரப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணர்கள் சிறப்பாக செயல்பட்டு ஐந்து பதக்கங்களை வென்றிருந்த நிலையில், அவர்கள் நேற்றைய தினம் இரவு நாட்டை வந்தடைந்தனர்.

இதன்போது அவர்களை, சர்வதேச இசை கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைக்கான தூதுவரான அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்றார்.

இந்தப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த 07 அழகுக்கலை நிபுணர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் இவர்களை இலங்கையின் அழகுக்கலை நிபுணரும், பயிற்சியாளருமான கயல்விழி ஜெயபிரகாஷ் அழைத்துச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் சார்பில் போட்டியிட்டவர்களில், யாழ்ப்பாணம், கொக்குவிலைச் சேர்ந்த சுலக்ஷனா சஞ்சீவன் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்று, இரண்டு பதக்கங்களைத் தனது பெயரில் பதிவு செய்துள்ளார்.

இதன்போது இரட்டைப் பதக்கங்களை வென்ற சுலக்ஷனா சஞ்சீவன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“சர்வதேச தரம் வாய்ந்த ஒரு அழகுக்கலை போட்டி நிகழ்ச்சியில் 14 நாடுகளைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமான போட்டியாளர்களுடன் போட்டியிட்டு பதக்கம் வென்றமை இலங்கைக்கு ஒரு பெருமை சேர்க்கும் விடயமாகும். குறிப்பாக வட பகுதியில் இருந்து கலந்து கொண்ட போட்டியாளர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி பதக்கங்களை வென்றது எமக்கு இரட்டை பெருமை மிகு தருணமாகும். மேலும் அடுத்த வருடமும் இப்போட்டியில் கலந்து கொண்டு அதிக அளவு பதக்கங்களை வெல்வதற்கு நாங்கள் உத்வேகமாக உள்ளோம்,” என்றார்.

இப்போட்டியில் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த 14 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்று போட்டியிட்டுருந்ததுடன், இலங்கைக் குழுவின் இந்த வெற்றி, சர்வதேச அளவில் நாட்டின் அழகுக் கலைத் திறனை மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளது.








# மோட்டார் சைக்கிள் மீது பஸ் மோதியதில் நான்கு பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

யாழ். மண்டைதீவு சந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் மீது சொகுசு பஸ் மோதியதில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்றாம் வட்டாரம் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த அன்னராசா பிறேமதன் (வயது61) என்பவராவார்.

நேற்று வியாழக்கிழமை (16) முற்பகல் 11.50 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சற்று நேரத்தில் அங்கு அவர் உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை ஊர்காவற்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

### யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக்:

# இன்றைய அரையிறுதியாட்டத்தில் அன்ரனிஸ், நவஜீவன்ஸ் மோதல்

'முரசு' மின்னிதழின் (A One Media) ஏற்பாட்டில் நடைபெற்று வரும் 'யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக் - 2025' (JAFFNA FOOTBALL PREMIER LEAGUE) தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் இன்று (17) பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் மணற்காடு அன்ரனிஸ், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள் மோதவுள்ளன.

முன்னர் நடைபெற்ற காலிறுதியாட்டங்களில், இளவாலை யங்கென்றிசியனை 3:1 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணியும், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் மணல்காடு அன்ரனீஸ் அணியும் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மற்றொரு அரையிறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது.



# ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாட ஐக்கிய தேசியக் கட்சியால் குழு நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடுவதற்காக மூவரடங்கிய குழுவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

அறிக்கை ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி இதனை தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன, கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி தலதா அத்துகோரள, ஜனாதிபதி சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

# வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெறும் வல்வைப் படுகொலை நூல் வெளியீடு நிகழ்வு

இந்திய அமைதிகாக்கும் படையினரால் நிகழ்த்தப்பட்ட வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போதான இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கை மற்றும் வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற உள்ளது.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ள வல்வைப்படுகொலை சம்பவத்தின் போது நிகழ்ந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கை வெளியீட்டு நிகழ்வும் கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள் அறிக்கையின் நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற உள்ளது.

பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி ஊடக இல்லத்தின் அலுவலகத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்கள் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பருத்தித்துறையில் ஞாயிறன்று வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பருத்தித்துறை நகரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

பருத்தித்துறை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் பூட்டப்பட்டு கட்டாய விடுமுறை வழங்கும் நடைமுறை பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் தீர்மானத்திற்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை, விசேட பண்டிகை நாள்களில் இந்த நடைமுறை விலக்களிக்கப்படும் என்ற தீர்மானத்திற்கு அமைவாக வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த 2 ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 19 ஆம் திகதி ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

குறிப்பாக ஆடை வர்த்தகர்களது கோரிக்கைக்கு அமைவாக தினசரி இரவு 10.00 மணியுடன் வியாபார நடவடிக்கைகளை நிறுத்தும் தீர்மானமும் திங்கள் கிழமை வரை விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த விலக்களிப்புகள் தீபாவளி தினத்துடன் முடிவுக்கு வருவதுடன், எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் கட்டாய விடுமுறை தீர்மானம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பருத்தித்துறை வர்த்தகர் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.



# தகரம் வெட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள இரும்பகம் ஒன்றில் தகர அட்டியை நகர்த்த முற்பட்ட வேலையாள் ஒருவர் தகரம் வெட்டியதில் படுகாயம் அடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையைச் சேர்ந்த கரிகரராசா தனஸ்குமார் (வயது 36) என்பவராவார்.

கடந்த 14 ஆம் திகதி தகர அட்டியை நகர்த்த முயன்ற போது தகரம் வெட்டியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக் கிழமை காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் விசாரணைகளை மேற்கொண்டார் சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.






# உத்தியோகபூர்வ சீருடைகள் வழங்கி வைப்பு

‘முரசு’ அனுசரணையுடன் ‘யாழ். உதைப்பந்தாட்ட பிரிமியர் லீக் - 2025 தொடர்’ யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தப் போட்டியில் கலந்துகொண்டுள்ள அணிகளின் வீரர்களுக்கான உத்தியோகபூர்வ சீருடைகள் நேற்று மாலை வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் போட்டியின் ஏற்பாட்டாளர்கள், அனுசரணையாளர்கள், உதைப்பந்தாட்ட அணிகளின் தலைவர்கள் மற்றும் வீரர்கள் கலந்துகொண்டனர்.






























# காயாக்குழியில் ரவிகரன் எம்.பி. குறைகேள் சந்திப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார் – சிலாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காயாக்குழி கிராமத்தில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

குறிப்பாக காயாக்குழி கிராமத்தில் வனவளத்திணைக்களத்தின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் அதிகரித்துக்காணப்படுவதாக இதன்போது மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அத்தோடு இந்தக் கிராமத்தில் 137 குடும்பங்கள் 54ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் வாழ்ந்துவருவதாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டிய கிராமமக்கள், 27குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு காணியில்லாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை காயாக்குழி கிராமத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு சுமார் 8.7கிலோமீற்றர் தூரமான உள்ளக வீதிகளைச் சீரமைப்பதற்கென ஆரம்பக்கட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை அந்தச் சீரமைப்புப் பணிகள் முற்றப்பெறவில்லையென மக்களால் முறையீடு செய்யப்பட்டது. மிகுதிவேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாததால் போக்குவரத்துச் செய்வதில் பலத்த இடர்பாடுகளுக்குத் தாங்கள் முகம் கொடுத்து வருகின்றனர் என மக்கள் தெரிவித்தனர். எனவே வீதிச்சீரமைப்புப் பணிகளை மீளஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கிராமமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதவிர காயாக்குழி கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், மீனவர் ஓய்வு மண்டபம் அமைத்தல், பஸ் தரிப்பிடம் அமைத்தல், கிராம அலுவலருக்கான அலுவலகத்தை அமைத்தல், காயாக்குழி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் போதுமான அளவில் கட்டட வசதிகளை ஏற்படுத்துதல், வெள்ளப்பாதிப்பு ஏற்படாமலிருக்க வடிகால்களை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளும் மக்களால் முன்வைக்கப்பட்டன.

மேலும் காயாக்குழியிலுள்ள முதியவர்கள் பலர் தமது முதியோர் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு நீண்டதூரம் பயணம் செய்து கொக்குப்படையான் தபாலகத்தில் தமது முதியோர் கொடுப்பனவுகளைப் பெறவேண்டியுள்ளதாவும், இதனால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற முதியோர் கொடுப்பனவுகள் போக்குரத்திற்கே செலவாகிவிடுவதாகவும் மக்களால் முறையீடுசெய்யப்பட்டதுடன், அந்த முதியோர் கொடுப்பனவுகளை காயாக்குழியில் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துதருமாறும் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு காயாக்குழி கிராமமக்களால் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், குறைபாடுகள் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.











- கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா -
(ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# கீழ்நிலை மக்களின் நலன்களிலிருந்துதான் வறுமை ஒழிப்பு கட்டமைக்கப்படவேண்டும்

**(இன்று சர்வதேச வறுமை ஒழிப்புத் தினம். அதை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.)**

“வறுமை ஒழிப்பே எல்லா மேம்பாட்டு உதவிகளின் நோக்கமாக இருக்க வேண்டும். மேம்பாட்டை மனித உரிமைக் கண்ணோட்டமாகக் காண வேண்டுமே தவிர, மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதாக மட்டும் பார்க்கக்கூடாது.” என்ற முகமது யூனுஸ் (Muhammad Yunus) அவர்களின் சொல்லாடல் செயலொழுங்கில் திறம் பெறுவது இவ் வறுமை ஒழிப்பு சார் முன்னேற்றங்களிலாகும்.

உலக வறுமை ஒழிப்பு தினம் (International Day for the Eradication of Poverty) ஆண்டுதோறும் அக்டோபர் 17 அன்று நாடாத்தப்படுகிறது. வறுமை, பசி, வன்முறை மற்றும் அநீதியால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை அங்கீகரித்து, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் கவனத்தை வறுமை ஒழிப்பு மற்றும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதன் அவசியத்தை நோக்கித் திருப்புவதே இந்த நாளின் முதன்மை நோக்கம் ஆகும்.

குறிப்பாக, வறுமையில் வாடும் மக்களின் குரல்களைக் கேட்பதற்கும், அவர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஆற்றும் பங்கைப் போற்றுவதற்கும் இது ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இந்த நாளின் கருப்பொருள், பெரும்பாலும் வறுமையால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகள், சுயமரியாதை மற்றும் அவர்களின் பங்களிப்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals - SDGs) அடைவதற்கும், குறிப்பாக வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் இது ஒரு முக்கியமான நினைவூட்டலாகச் செயல்படுகிறது.

வறுமை ஒழிப்பின் வரலாற்றுப் பின்னணியை நோக்கினால் –

இந்த தினத்தின் வரலாறு 1987 இல் பிரான்சின் பாரிஸில் ஜோசப் விரேஸின்ஸ்கி (Joseph Wresinski) என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் இருந்து தொடங்குகிறது. மனித உரிமைகள் பிரகடனத்தில் கையெழுத்திடப்பட்டதன் 40 ஆவது ஆண்டுநிறைவைக் குறிக்கும் வகையில், வறுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, 100,000 க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். மனித உரிமை மீறலின் ஒரு வடிவமாக வறுமையைக் கருதுவதும், வறுமையில் வாடும் மக்களை இழிவாகக் கருதாமல் அவர்களுக்குக் கௌரவம் அளிப்பதும் இந்தச் சந்திப்பின் மையக் கருத்தாக இருந்தது.

1992 இல், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அக்டோபர் 17-ஐ அதிகாரப்பூர்வமாக “உலக வறுமை ஒழிப்பு தினமாக” அறிவித்தது. வறுமை ஒழிப்புக்கான சர்வதேசச் சமூகத்தின் அர்ப்பணிப்பை வலுப்படுத்துவதிலும், உலகளாவிய ஒற்றுமையை மேம்படுத்துவதிலும் இந்த நாள் இன்றியமையாத பங்களிக்கிறது.

முக்கியத்துவம் மற்றும் தாக்கம் எனும்போது இது ஒரு செயலுக்கான அழைப்பு. வறுமையின் சிக்கலான மற்றும் பல்பரிமாணத் தன்மையை இந்த நாள் முன்னிலைப்படுத்துகிறது. ஏனெனில், வறுமை என்பது வெறும் பணமின்மையை மட்டும் குறிப்பதல்ல் இது சுகாதாரம், கல்வி, நீர், சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் பங்கேற்பு போன்ற அடிப்படை உரிமைகளுக்கான அணுகல் இல்லாமையையும் உள்ளடக்கியது.

உலகெங்கிலும் உள்ள தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் அரசாங்கங்கள் இந்த நாளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை மேற்கொள்கின்றன. நீண்டகால, நிலையான தீர்வுகளை உருவாக்குவதற்கும், குறிப்பாகப் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலமும், சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலமும், அனைவருக்கும் சமத்துவத்தை நிலைநாட்டுவதன் மூலமும் வறுமை இல்லாத உலகை உருவாக்குவதே இதன் இலக்காகும்.

இதன் முதன்மை முன்னெடுப்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதன் மூலமும், ஊதிய உத்தரவாதம் அளிக்கும் திட்டங்களை வலுப்படுத்துவதன் மூலமும் நீடித்த

தொடர்ச்சி▼

# கீழ்நிலை மக்களின் நலன்களிலிருந்துதான் வறுமை ஒழிப்பு கட்டமைக்கப்படவேண்டும்

தொடர்ச்சி▲

மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியுடன் கூடிய வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும். மேலும், வறுமையின் சுழற்சியை உடைக்க, தரமான ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி, அத்துடன் சந்தை தேவைகளுக்கேற்ற தொழில்சார் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றை அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்வது மிக அவசியம். இது தவிர, சமூகப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவது அவசியமாகும்.

இதில் பொது விநியோக முறை மூலம் உணவுப்




பாதுகாப்பு, அனைவருக்கும் இலவச மருத்துவக் காப்பீடு மற்றும் நேரடிப் பணப் பரிமாற்றம் ஆகியவை மூலம் ஏழைகளைக் காப்பது அடங்கும். இறுதியாக, நிதி உள்ளடக்கம் மற்றும் நுண் கடன் சேவைகளை ஏழை மக்களுக்கு வழங்குவது, அவர்கள் சுயதொழில் தொடங்கவும், பொருளாதார ரீதியாகச் சுதந்திரமடையவும் உதவுகிறது. இத்தகைய விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முன்னெடுப்புகள் மூலமாகவே வறுமையை வேரறுத்து, அனைத்துக் குடிமக்களுக்கும் கண்ணியமான வாழ்க்கை அமைவதை உறுதி செய்ய முடியும்.

வறுமையை ஒழிக்க அடிமட்ட கட்டமைப்புகளிலிருந்து மேலெழ வேண்டிய வழிமுறைகள் கட்டுரை வடிவில் பந்தி அமைப்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### அடிமட்ட கட்டமைப்பிலிருந்து வறுமையை ஒழித்தல்

வறுமை என்பது ஒரு சமூகத்தின் வளர்ச்சியையும், தனிமனிதனின் கௌரவத்தையும் பாதிக்கும் ஒரு பெரும் சவால். அடிமட்ட கட்டமைப்புகளில் இருந்து வறுமையை ஒழிப்பது என்பது, உள்ளூர் மட்டத்தில் மக்களை வலுவூட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மூலம் தொடங்குகிறது. இந்த அணுகுமுறை, ஏழைகளின் தேவைகள் மற்றும் திறமைகளுக்கு ஏற்ப திட்டங்களை வகுக்க உதவுகிறது.

### கல்வி மற்றும் திறன் மேம்பாடு

வறுமை ஒழிப்புக்கான முதல் படி கல்வி. அனைவருக்கும் தரமான கல்வியை, குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குழந்தைகளுக்கு வழங்குவது அவசியம். அடிப்படை கல்வியுடன், வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழில்நுட்பப் பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அடிமட்ட அளவில் செயல்படுத்த வேண்டும். இதன் மூலம், தனிநபர்கள் தங்களது அறிவையும், உழைப்பையும், நேரத்தையும் விற்று பணம் ஈட்ட முடியும். புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில்களை உருவாக்க, அரசு மாறிவரும் உலக தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப புதுப்புது தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்.

### உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்

உற்பத்தியை பன்மடங்கு அதிகரிப்பது மற்றும் சிறு வணிகங்களை ஆதரிப்பது உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியம். வறுமையில் உள்ள மக்கள் சிறு தொழில்களைத் தொடங்க நுண் நிதியியல் சேவைகளை வழங்குவது, அவர்களுக்கு சிறு கடன்கள் மற்றும் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவு அளித்தல், நிலையான விவசாய முறைகளை ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் பொருள்களுக்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை வருமானத்தை மேம்படுத்தும்.

### மக்கள் பங்கேற்பு மற்றும் சமூக வலுவூட்டல்

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் ஏழைகளுக்காக அல்லாமல், ஏழைகளுடன் சேர்ந்து திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். அடிமட்ட கட்டமைப்பில் உள்ள சுய உதவிக் குழுக்கள் போன்ற சமூக அடிப்படையிலான அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம், பெண்கள் உட்பட ஏழை மக்கள் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்க முடியும். இது அவர்களுக்கு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி, அரசின் நலத்திட்டங்களை அறிந்து பயன்படுத்திக்கொள்ள உதவும். சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், சுகாதாரம், கல்வி மற்றும் அத்தியாவசிய சேவைகளில் மக்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவது அவசியம்.

### அடிப்படை வசதிகள் மற்றும் சமூக பாதுகாப்பு

ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு அத்தியாவசியமான சுகாதாரம், தூய குடிதண்ணீர், முறையான கழிப்பறைகள், மின்சாரம் மற்றும் தங்குமிட வசதி போன்ற அடிப்படை கட்டமைப்புகளை கிராமப்புறங்களிலும், நகர்ப்புற ஏழைகளுக்கும் வழங்குவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். மேலும், சமூகப் பாதுகாப்பு வலைகள், காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்களை ஏழைகள் எளிதில் அணுகுவதற்கு வழிவகை செய்வது, எதிர்பாராத இழப்புகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும். ஊழலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும், திட்டங்களை முறையாக கண்காணிப்பதற்கான வழிமுறைகளையும் அடிமட்டத்தில் வலுப்படுத்துவது அவசியம்.



# இருள் சூழ்ந்த நேரத்தில் உதவிய உண்மையான நண்பன் இந்தியா

## தான் படித்த டில்லி பல்கலையில் பிரதமர் ஹரிணி பெருமிதம்

**(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)**

கல்வியும், கருணையும் ஒன்றாக கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்று இந்தியப் பல்கலைக்கழகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியா தெரிவித்தார்.

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்றான இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, இந்திய அரசு சார்பில் இலங்கை அரசுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. மேலும் இலங்கை மக்களுக்காக இந்திய அரசு உணவு, நிதி மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைத்து பல முறை உதவிக்கரம் நீட்டியுள்ளது.

இந்நிலையில், இந்தியாவின் நிதி உதவியை இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியா நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்துள்ளார். இலங்கையின் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் முதல் முறையாக ஹரிணி அமரசூர்யா, 3 நாள்கள் சுற்றுப்பயணமாக இந்தியாவிற்கு நேற்று வருகை தந்தார். தனது சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக புதுடில்லி பல்கலைக் கழகத்திற்குச் சென்று, அங்குள்ள மாணவர்களைச் சந்தித்துப் பேசினார்.

ஹரிணி அமரசூரியா புதுடில்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவராவார். கடந்த 1991 முதல் 1994 வரை புதுடில்லி பல்கலைக்கழகத்தில் இளங்கலை சமூகவியல் படித்து பட்டம் பெற்றுள்ளார். தற்போது இலங்கையின் பிரதமராக பதவியேற்று, தங்கள் பல்கலைக் கழகத்திற்கு சிறப்பு விருந்தினராக வருகை தரும் முன்னாள் மாணவி ஹரிணி அமரசூரியாவை வரவேற்க மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகமாக காத்திருந்தனர். அவரை வரவேற்கும் விதமாக பெரிய பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.




பின்னர்பல்கலைக்கழகவளாகத்திற்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரியாவை, பல்கலைக்கழக முதல்வர் அஞ்சு ஶ்ரீவஸ்தவா வரவேற்றார். அதைத் தொடர்ந்து மாணவர்களின் உற்சாக வரவேற்பை ஹரிணி ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகளுடன் ஹரிணி அமரசூரியா உரையாடினார். அப்போது மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

மாணவர்களிடம் பேசியபோது, “கல்வியும், கருணையும் ஒன்றாக கைகோர்த்துச் செல்ல வேண்டும். கருணை இல்லாமல் அறிவு முழுமையடையாது” என்றார். மேலும் “ஜனநாயகம் என்பது விளையாட்டு அல்ல, அது கடின உழைப்பு” என்று குறிப்பிட்ட அவர் “வீட்டிலோ, அலுவலகத்திலோ அல்லது நாடுகளுக்கு இடையிலோ தடைகளை உருவாக்க வேண்டாம், பாலங்களை உருவாக்குங்கள்” என்று தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா அளித்த நிதி உதவி குறித்து பேசிய அவர் “இருள் சூழ்ந்த நேரத்தில் உண்மையான நண்பனைப் போல் இலங்கைக்கு இந்தியா கைகொடுத்து உதவியது” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.












# நாவிதன்வெளி சொறிக்கல்முனை பிரதேசத்தில் யானைகளை காட்டுக்குள் விரட்டும் நடவடிக்கை

**(பாறுக் ச்கிஹான்)**

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சொறிக்கல்முனை பகுதியை அண்டிய நாணல் காட்டுப்பகுதியில் நிலை கொண்டு அருகில் உள்ள கிராமங்களை தாக்கிய சுமார் 40 யானைகளை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை காட்டுக்குள் விரட்டும் நடவடிக்கை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.

இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குடியிருப்பை அண்மித்த வயல் பகுதிகளில் கடந்த சில நாள்களாகக் காட்டு யானைகளின் நடாமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றமை குறித்து வனஜீவ ராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய செயற்பட்ட வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் இந்தொ பிரதேச வயல் வெளிப் பகுதியில் தொடர்ச்சியாக காணப்பட்ட காட்டு யானைகளை சம்மாந்துறை, அம்பாறை வனப் பிரதேசத்தை நோக்கி விரட்டியுள்ளனர்.

தற்போது நெல் விதைப்பு பருவ காலமாகையினால் இப்பகுதிகளில் உள்ள அனைத்து காட்டு யானைகளும் இனங்காணப்பட்டு அவற்றை அருகில் உள்ள காடுகளுக்குள் விரட்டும் பணிகளை தொடர்ந்தும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

அதனைப்பார்வையிடவரும்பொதுமக்களை சவளக்கடை பொலிஸார் கட்டுப்படுத்தி வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

யானை – மனித மோதலை கட்டுப்படுத்துவதற்கு தமது திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக உயிரிழப்புகள் குறைந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.


















# முத்து நகர் விவசாயிகளின் போராட்டம் நேற்றைய தினத்துடன் ஒரு மாதம் பூர்த்தி

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் தங்களது விவசாய நில அபகரிப்புக்கு எதிராக நேற்று 30 ஆவது நாளாக தொடர் சத்தியாக் கிரகஒ போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக இடம் பெற்று வருகிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதமர் ஹரிணி அமரசூரிய வழங்கிய இரண்டாம் கட்ட வாக்குறுதியை நிறைவுசெய்யஇன்னும்மூன்றுநாள்களே எஞ்சியுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை துறை முக அதிகார சபையின் காணி எனக் கூறி 352 விவசாய குடும்பங்களை வெளியேற்றி, அக்காணிகளை சூரிய மின் சக்தி உற்பத்திக்காக தனியார் கம்பனிகளுக்கு தாரை வார்த்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் இரு விவசாய நீர்ப்பாசன குளங்களை மூடி சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டத்துக்கு வழங்கியதால் தங்கள் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்குச் சாதகமான தீர்வைப் பெற்றுத் தராத பட்சத்தில் போராட்டம் தொடரும் எனவும் மக்கள் எச்சரித்துள்ளன

















# மன்னார் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வு நேற்று

மன்னார் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாலை வங்கி கட்டடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக உதவி மாவட்ட முகாமையாளர், மன்னார் கிளை முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது அந்த வங்கியின் வாடிக்கையாளர்களின் பிள்ளைகள் சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது சிறுவர்களுக்கு பரிசு வழங்கி மகிழ்விக்க பட்டமையோடு அந்தச் சிறுவர்களுக்கான புதிய வங்கி கணக்குகளும் திறந்து வைக்கப்பட்டன.


















# கிளிவெட்டியில் காட்டு யானை அட்டகாசம் கடையுடன் கூடிய கொட்டில் சிதைத்தழிப்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**


மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிளிவெட்டி கிராமத்திற்குள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை உட்புகுந்த காட்டு யானை சிறிய கடையுடன் கூடிய கொட்டில் ஒன்றை உடைத்து அங்கிருந்த பொருள்களுக்கு சேதம் விளைவித்துள்ளதுடன் அருகில் இருந்த தென்னை, வாழை மற்றும் வீட்டுப் பயிர்களுக்கும் சேதம் விளைவித்துள்ளது.

கிளிவெட்டிக் குளத்தை அண்டி நடமாடுகின்ற இந்த யானை திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியை கடக்கும்போது வீதியின் அருகில் இருந்த சிறிய கடையை சேதப்படுத்தியுள்ளது. இதனால் அதனை வாழ்வாதார தொழிலாக நம்பி வாழ்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த யானையினால் உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். அந்த யானையை அங்கிருந்து விரட்டுமாறு வனவளப்பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கிளிவெட்டி, மேன்காமம், பெருவெளி குளங்களில் பெரும் எண்ணிக்கையான யானைகள் தங்கி நிற்கின்றமையால் அருகில் உள்ள கிராம மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் நிலவி வருகின்றது. இவற்றை காட்டுக்குள் விரட்டியடிப்பபடற்கு நடவடிக்கை எடுப்பதோடு யானை வேலி அமைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.








ஜெகன் ஹரிமாத்ரி,
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# வறுமையற்ற உலகம் நோக்கி...!

**"தனி ஒருவனுக்கு உணவில்லையில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்!"
- சுப்ரமணிய பாரதியார்.**

ஒக்ரோபர் – 17 உலகம் முழுவதும் "வறுமையை ஒழிக்கும் சர்வதேச நாள்" எனக் கொண்டாடப்படுகிறது. ஆனால் இது வெறும் ஒரு நாள் கொண்டாட்டம் அல்ல. இது, இன்னும் பலர் பசியோடு உறங்கும் உலகின் நிஜத்தை நம்மை நேருக்கு நேர் சந்திக்க வைக்கும் ஒரு விழிப்புணர்வு நாள்.

வறுமை என்ற சொல், ஒரு வெற்று பணமின்மையைக் குறிக்காது. அது ஒரு மனிதனின் மரியாதையும் உரிமைகளையும் பறிக்கும் நிலை. ஒரு தாய் தனது பிள்ளைக்கு ஒரு முறை கூட பால் கொடுக்க முடியாமல் தவிக்கும் போது, அதுதான் வறுமையின் முகம். திருவள்ளுவர் கூறியுள்ளார்: "இல் அறிவான் என்பான் இயல்பில்அறிவு இல்லான்" அறிவும் வாய்ப்பும் இல்லாதவன் தான் உண்மையில் வறியவன்.

வறுமை இரண்டு வகையாகும்.

1. தீவிர வறுமை – உணவு, குடி தண்ணீர், சுகாதாரம், வீடு போன்ற அடிப்படை தேவைகளுக்கே அணுகல் இல்லாத நிலை.

2. பொதுவான வறுமை – சமூகத்தில் மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வாழ்க்கைத் தரம் கொண்ட நிலை.

இவ்விரண்டுக்கும் வேராக இருப்பது சமத்துவமின்மை. ஒருவரிடம் அளவுக்கு மீறிய செல்வம் சேர, இன்னொருவர் உணவுக்காக போராடும் நிலை உருவாகிறது.

## வறுமையை ஒழிக்கும் சர்வதேச நாளின் வரலாறு

1987 ஒக்ரோபர் 17 அன்று, பிரான்சில் உள்ள "ஹ்யூமன் ரைட்ஸ் அண்ட் பாவர்டி மோன்யூமெண்ட்" முன் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி, வறுமையை ஒழிக்க உறுதியெடுத்தனர். அந்த நிகழ்வின் நினைவாக, 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை ஒக்ரோபர் 17 ஆம் திகதியை வறுமை ஒழிப்பு தினம் என அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகள் பல்வேறு சமூகப் பணிகள், கருத்தரங்குகள், கல்வி விழிப்புணர்வு நிகழ்வுகள், இளைஞர் இயக்கங்கள் போன்றவற்றை நடத்தி வருகின்றன. அனைத்தும் ஒரே செய்தியைப் பரப்புகின்றன "ஒருவரின் துயரம் எல்லோரின் பொறுப்பு."

இன்றும் உலகில் சுமார் 80 கோடி மக்கள் தினசரி 2.15 அமெரிக்க டாலருக்குக் குறைவாகவே வாழ்கின்றனர். இது வெறும் புள்ளி விவரம் அல்ல. இது ஒரு குழந்தையின் பசியுடன் உறங்கும் கதை. ஒரு தாயின் கண்ணீரின் சுவை. ஆப்பிரிக்கா, தென் கிழக்கு ஆசியா, மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் வறுமையின் தாக்கம் கடுமையாகவே உள்ளது. கல்வி இல்லாமை, வேலைவாய்ப்புப் பற்றாக்குறை, பொருளாதார சமநிலை இல்லாமை என இவை அனைத்தும் மனித முன்னேற்றத்தைத் தடுத்து நிற்கின்றன.

இலங்கை ஒரு வளமான கலாச்சாரம், கல்விப் பாரம்பரியம் கொண்ட நாடாக இருந்தாலும், வறுமை இன்னும் பல குடும்பங்களின் வாழ்க்கையில் ஆழமாகவே வேரூன்றியுள்ளது. சிறுபாண்மைச் சமூகங்கள், மீன்பிடி மற்றும் வேளாண்மை சார்ந்த கிராமப்புற மக்கள், மற்றும் போருக்குப் பிறகு மறுவாழ்வு தேடும் குடும்பங்கள் இதன் பிரதான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பல குடும்பங்கள் ஒரே நாளில் ஒரு முறை மட்டுமே உணவருந்துகின்றன. பல மாணவர்கள் புத்தகமின்றி, உடையின்றி, சில நேரங்களில் பசியுடன் கூட பள்ளிக்கு செல்கின்றனர். அரசு பல நலத் திட்டங்களை (சமுர்த்தி திட்டம் போன்றவை) அறிமுகப்படுத்தியிருந்தாலும், நிலையான வேலை வாய்ப்பு இல்லாமை, பொருளாதார வீழ்ச்சி, மற்றும் பணவீக்கம் ஆகியவை வறுமையை நீக்க முடியாத சவாலாகவே மாறிவிட்டன. வறுமையை ஒழிப்பது வெறும் அரசின் கடமை அல்ல. அது ஒரு சமூகப் பொறுப்பு.

வறுமை ஒரு நாளில் உருவாகவில்லை. அது பல தலைமுறைகளாகச் சேர்ந்து வந்த காரணிகளின் விளைவு. வேலைவாய்ப்பு மற்றும் நிலையான வருமானம் இல்லாமை, கல்விக் குறைவு மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகள் இல்லாமை, பெண்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு சம வாய்ப்பு இல்லாமை ஊழல், அரசியல் தவறுகள் மற்றும் பொருளாதாரச் சீர்கேடு, இயற்கைப் பேரழிவுகள் மற்றும் உலகளாவிய பொருளாதார அதிர்வுகள் என அனைத்தும் சேர்ந்து, வறுமையை ஒரு சுற்றுச் சுழல் நோயாக மாற்றுகின்றன. ஒரு தலைமுறை அனுபவித்த துன்பம், அடுத்த தலைமுறைக்கும் மரபாகச் சென்றடைகிறது.

## கல்வி வறுமை ஒழிப்பின் முக்கிய ஆயுதம்

ஒரு குழந்தைக்கு கல்வி கிடைத்தால், ஒரு குடும்பம்

தொடர்ச்சி▼

# வறுமையற்ற உலகம் நோக்கி...!

தொடர்ச்சி▲

வறுமையில் இருந்து மீள்கிறது. ஒரு சமூகத்தை அபிவிருத்தி அடைய செய்ய வேண்டும் எனில் அங்குள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமாக எதிர்கால சந்ததியினரை ஒரு அபிவிருத்திமிக்க சூழலில் வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும். அது வெறும் எழுத் தறிவு அல்ல, வாழ்க்கை மாற்றும் சக்தி. உலகம் முழுவதும் நடந்த ஆய்வுகள் காட்டுகின்றன. கல்வி யறிவு பெற்ற மக்களில் வறுமை விகிதம் குறைவு.

கல்வி ஒருவருக்கு வேலைவாய்ப்பை மட்டுமல்ல, தன்னம்பிக்கை, விழிப்புணர்வு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றையும் தருகிறது. அதனால் அரசு மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து, "எல்லோருக்கும் தரமான கல்வி" என்ற இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும்.

### பெண்கள் மற்றும் வறுமை

பெண்கள் சமூகத்தின் முதுகெலும்பு. ஆனால் வறுமையின் மிகப் பெரும் சுமையைச் சுமப்பது பெரும்பாலும் அவர்களே. ஒரு தாய் குடும்பத்தின் நம்பிக்கையாகவும், பொருளாதாரத்தின் ஓர் அங்கமாக வும் இருக்கிறார். அவர்களுக்கு கல்வி, தொழில் பயிற்சி, சிறு கடன் திட்டங்கள் போன்றவை வழங்கப் படும்போது, அவர்கள் குடும்பத்தின் வாழ்க்கை மட்டுமல்ல சமூகத்தின் நிலையும் உயர்கிறது. பெண் கள் சுயநிறைவு அடைந்தால், வறுமை குறைகி றது. வறுமை குறைந்தால், நாடு முன்னேறுகிறது.

இளைஞர்களின் பங்கு

இன்றைய இளைஞர்கள் நாளைய சமூகத் தின் வழிகாட்டிகள். அவர்கள் தான் மாற்றத்தின் முகம். "மாற்றம் தேவை" என்று சொல்லுவதற்குப் பதில்,"நான் மாற்றம்" என்று சொல்லும் மனப்பாங்கு இளைஞர்களில் வளர வேண்டும். இளைஞர்கள் சமூக சேவையில் ஈடுபட்டு, பள்ளி விட்டு விலகும் குழந்தைகளுக்கு கல்வி உதவி செய்யலாம், தொழில் முனைவு வழிகளில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம், சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்த வளர்ச்சி முயற்சிகளில் பங்கேற்கலாம். வறுமையை ஒழிப்பது ஒரு அரசியல் வேலை அல்லஅது ஒரு மனிதப் பணி.

### அரசு மற்றும் சமூக அமைப்புகளின் பங்கு

அரசு வறுமையை எதிர்கொள்ள பல நலத் திட்டங்கள், கல்வி உதவித் திட்டங்கள், வீடு வழங்கும் திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துகி றது. அதே சமயம், தொண்டு அமைப்புகள், மத அமைப்புகள், மற்றும் சமூகச் சங்கங்கள் மனித நேயம் மையமாக செயல்படுகின்றன. ஆனால் இத திட்டங்கள் உண்மையில் பயனடைய வேண்டுமெ னில், தெளிவான நிர்வாகமும், ஊழல் இல்லாத செயல்பாடும் அவசியம். வறுமையற்ற உலகம் ஒரு கனவு அல்ல, ஒரு இலக்கு வறுமை என்பது ஒருவ ரின் குற்றம் அல்ல அது ஒரு சமூகத்தின் தோல்வி. அதனால் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது நம் கடமை. கல்வி, சமத்துவம், பாசம், மற்றும் செயல் இவை தான் வறுமையற்ற உலகத் தின் தூண்கள். நாம் இன்று செய்கிற ஒவ்வொரு சிறிய உதவியும், நாளைய வறுமையற்ற உல கத்தின் விதையாக மாறும். ஒரு பசியை தீர்ப்பது மனிதாபிமானம் ஆனால் பசியற்ற சமூகத்தை உருவாக்குவது மனித முன்னேற்றம். "பசியை போக்கு வோம், பாசத்தை வளர்ப்போம்,வறுமையற்ற உலகம் நமக்குள் தொடங்கட்டும்."

வறுமையை ஒழிப்பது அரசின் வேலை மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனின் மனிதத்துவப் பொறுப்பு. நம் சிறிய நற்காரியங்கள், மற்றொருவரின் வாழ்வை மாற்றும் பெரும் சக்தியாக மாறும். நாம் ஒன்றி ணைந்து செயற்பட்டால், வறுமையற்ற உலகம் என்பது ஒரு கனவு அல்ல. நம்மால் அடையக் கூடிய நிஜம்.

# நோர்வூட்டில் மின்னல் தாக்குதல் டொல்பின் வானும் வீடும் சேதம்!

நோர்வூட்டில் பெய்த கனமழையுடன் ஏற்பட்ட மின்னல் தாக்குதலால் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த டொல்பின் வான் மற்றும் அருகிலுள்ள வீடு பலத்த சேதத்துக்கு உள்ளாகி யுள்ளன. வீட்டில் இருந்த ஒருவர் அதிர்ச்சியில் விழுந்து காயமடைந்து, டிக்கோயா கிளங்கன் அடிப்படை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

வான் நிறுத்தும் பகுதிக்கு அருகிலுள்ள ஒரு பெரிய மரத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5:00 மணியளவில் மின்னல் தாக்கியதாகவும், பின்னர் அது வான் மற்றும் வீட் டின் மீது தாக்கியதாகவும் நோர்வூட் குடியிருப்பாளர்கள் தெரி வித்தனர். மின்னல் தாக்கத்தால் நோர்வூட் பகுதியில் மின் சாரம் திடீரந்த் துண்டிக்கப்பட்டது.




# 15 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மட்டக்களப்பில் 17 வயதுடைய சிறுவன் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோ கம் செய்த குற்றச்சாட்டில் 17 வயது சிறு வன் ஒருவரை நேற்று வியாழக்கிழமை அதிகாலை தாங்கள் கைது செய்துள்ள னர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் உள்ள பிரதேசம் ஒன் றில் சம்பவ தினமான நேற்று அதி காலை சிறுமி ஒருவர் அறையில் இருந்து காணாமல் போயுள்ள நிலையில் அவரை தேடிய உறவினர்கள் நிலையில் வீதியில் 17 வயதுடைய ஒருவருடன் இருப்பதை கண்டு இருவரையும் பிடித்து பொலிஸா ரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 17 வயதுடைய சிறுவனைக் கைது செய்தமையுடன் சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்

இது தொடர்பாக மேலதிக விசாரணை களைபொலிஸ்பெண்கள்பிரிவினர்விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# ரஷ்ய எண்ணெயை வாங்க மாட்டோமென ட்ரம்பிடம் பிரதமர் மோடி உறுதி அளித்தாரா?

## இந்திய வெளியுறவு அமைச்சகம் விளக்கம்

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்க மாட்டோம் என பிரதமர் மோடி தன்னிடம் உறுதி அளித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ள நிலையில், அது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ பதிவில்,

“எண்ணெய் மற்றும் எரிவாயுவை கணிசமாக இறக்குமதி செய்யும் நாடு இந்தியா

சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை நிலையற்றதாக உள்ள நிலையில், இந்திய நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதே எங்களின் தொடர்ச்சியான முன்னுரிமையாக இருந்து வருகிறது. இந்த அடிப்படையில்தான் எங்களின் இறக்குமதி கொள்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

நிலையான எண்ணெய் விலை, பாதுகாப்பான விநியோகம் ஆகியவையே இந்தியாவின் எரிசக்தி கொள்கையின் இரட்டை இலக்குகளாகும். இந்தியாவின் எரிசக்தி ஆதாரங்களை விரிவுபடுத்துவதும், சந்தை நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்ப பல்வகைப்படுத்துவதும் இதில்



அடங்கும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, அந்நாட்டிடம் இருந்து எரிசக்தி கொள்முதலை விரிவுபடுத்த பல ஆண்டுகளாக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். கடந்த 10 ஆண்டுகளாக இதில் சீரான முன்னேற்றம் இருந்து வருகிறது. தற்போதைய நிர்வாகம், இந்தியாவுடன் எரிசக்தி ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதில் ஆர்வம் காட்டி இருக்கிறது. இது தொடர்பாக விவாதங்கள் நடந்து வருகின்றன.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் கூறியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

“ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் வாங்குவதில் நான் மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்க மாட்டார்கள் என்று மோடி எனக்கு உறுதியளித்தார். உங்களுக்குத் தெரியும், இதை உடனடியாக செய்ய முடியாது. இது ஒரு சிறிய செயல்முறை, ஆனால் செயல்முறை விரைவில் முடிவடையும்.

ரஷ்யாவை பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்த இது ஒரு பெரிய படி. இப்போது சீனாவையும் அதையே செய்ய வைக்கப் போகிறோம். மோடி ஒரு சிறந்த மனிதர். அவர் ட்ரம்பை நேசிக்கிறார். நான் அவரது அரசியல் வாழ்க்கையை அழிக்க விரும்பவில்லை.

நான் பல ஆண்டுகளாக இந்தியாவைப் பார்த்து வருகிறேன். அது ஒரு நம்பமுடியாத நாடு, ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு புதிய தலைவர் அங்கு இருப்பார். ஆனால், என் நண்பர் மோடி நீண்ட காலமாக அங்கு தலைவராக இருக்கிறார்” என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ட்ரம்ப்பின் கருத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுத்துள்ளது.



# சத்தீஸ்கரில் 42 பெண்கள் உட்பட 77 நக்சலைட்கள் சரணடைந்தனர்

சத்தீஸ்கரில் 42 பெண்கள் உட்பட 77 நக்சலைட்கள் பாதுகாப்புப் படையினர் முன்னிலையில் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்துள்ளனர்.

நக்சல் அபாயம் உள்ள மாநிலங்களில் அடுத்தாண்டு மார்ச் 31 ஆம் திகதிக்குள் நக்சலைட்கள் ஒழிக்கப்படுவர் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உறுதிபட தெரிவித்துள்ளார். இதனால் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து நக்சலைட்கள் சரணடைவதும் அதிகரித்து வருகிறது. மகாராஷ்டிரா மாநிலம் கட்சிரோலி மாவட்டத்தில் நக்சல் தலைவர் சோனு சரண் தலைமையில், 60 பேர் நேற்று முன்தினம் சரணடைந்தனர்.

இந்நிலையில், சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 10 பெண்கள் உட்பட 27 நக்சலைட்கள் சி.ஆர்.பி.எப். பொலிஸ் அதிகாரிகள் முன்பு நேற்று முன்தினம் சரணடைந்தனர். இவர்களில் பலரது தலைக்கு 50 லட்சம் இந்திய ரூபா வரை பரிசுகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

இதேபோல் சத்தீஸ்கரின் கான்கெர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் நக்சல் கொமாண்டர் ராஜ்மன் மண்டாவி தலைமையில் 32 பெண்கள் உட்பட 50 நக்சலைட்கள் எல்லை பாதுகாப்புப் படையினர் முன்பு சரணடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் அவர்கள் 39 ஆயுதங்களையும் ஒப் படைத்தனர். பிஜப்பூர் மாவட்டம் பாய்ரம்கர் பகுதியில் 120 நக்சலைட்கள் சரணடைவர் என எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யா ஜனாதிபதி புடினை மீண்டும் சந்திக்கிறார் ட்ரம்ப்



உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ரஷ்யா ஜனாதிபதி புடினை சந்திக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்புக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை.

எனினும் இந்த சந்திப்பு ஹங்கேரியின் புடாபெஸ்டில் நடைபெறும் என்று ட்ரம்ப் சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# சீனா மீது 500 வீதம் வரி விதிக்கும் ட்ரம்புக்கு 85 செனட்டர்கள் ஆதரவு

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக, சீனா மீது 500 வீத வரியை விதிக்கும் ட்ரம்பின் அதிகாரத்திற்கு ஆதரவு கிடைத்துள்ளது.

இதற்கமைய ட்ரம்பின் இந்த அதிகாரத்திற்கு ஆதரவளிக்க, 85 செனட்டர்கள் தயாராகியுள்ளனர் என அமெரிக்க திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவில் ஈடுபட்டு வரும், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப கூடுதல் வரிகளை விதித்துள்ளார்.



அத்துடன், ரஷ்ய எண்ணெய்யை கொள்வனவு செய்தமைக்காக சீனா மற்றும் இந்தியாவை ட்ரம்பின் அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையில் அமெரிக்க திறைசேரி செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய்யை நீண்ட காலத்திற்கு கொள்வனவு செய்யப்போவதில்லை என, இந்தியப் பிரதமர் தமக்கு உறுதியளித்தார் என அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் தெரிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.




# வெடித்து சிதறிய டைட்டன்; காரணம் கண்டறியப்பட்டது

மோசமான பொறியியல் நிலைமை காரணமாக டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் வெடித்துச் சிதறியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைப் பார்வையிட சென்றபோது, 2023 ஜூன் மாதம் வடக்கு அட்லாண்டிக் கடலில் அந்த நீர்மூழ்கிக் கப்பல் வெடித்து சிதறியது.

இந்த விபத்தில் அதில் இருந்த ஐந்து பயணிகளும் உயிரிழந்தனர்.

கேப் கோட் அருகே 13,000 அடி ஆழத்தில் சென்றபோது அந்தக் நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போனது.

நீண்ட தேடுதலுக்குப் பிறகு, கப்பல் வெடித்து சிதறியது கண்டறியப்பட்டது.



விபத்து நடந்து பல நாள்களுக்குப் பிறகு, நீர்மூழ்கிக் கப்பலின் உடைந்த பாகங்கள் மற்றும் பயணிகளின் உடல்கள் மீட்கப்பட்டன.

இந்த விபத்து குறித்து நடத்தப்பட்ட தொடர் விசாரணைகளில் மோசமான பொறியியல் நிலைமையே விபத்துக் குக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -17.10.2025

## மேஷம்

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து செல்வது கூட உங்களுக்கு மன உளைச்சலைத் தரும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தவறுகள் நேராமல் இருப்பதற்கு சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில ஈகோ பிரச்சினைகளை சந்திக்க நேரும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

வீட்டை பராமரிக்கும் அல்லது புதுப்பிக்கும் வகையில் செலவினங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம்.

## ரிஷபம்

இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். மகிழ்ச்சியான புது அனுபவங்கள் உங்களுக்கு காத்திருக்கின்றது.

பணியில் காணப்படும் வளர்ச்சி உங்களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவதற்கான நேரம். இதனால் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

இன்று நீங்கள் விரும்பும் வகையில் பணம் செலவு செய்யும் அளவில் சுதந்திரம் காணப்படும். நீங்கள் பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

## மிதுனம்

ஆன்மீகம் சம்பந்தப்பட்ட பயணங்களுக்கு இன்றைய நாள் சிறந்தது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நீங்கள் நினைத்தது நடக்கும்.

பணியிடத்தில் சில மன உளைச்சல்கள் காணப்படும். பணியில் கூடுகள் சுமைகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை கவனமாக பகிர்ந்து கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது நல்லது.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

## கடகம்

இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படுவீர்கள்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் தவறுகள் ஏற்படும். எனவே கவனமாக பணியாற்றவும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

பணத்திற்கான சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. கடன்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாக காணப்படுகின்றது.

## சிம்மம்

நீங்கள் கடினமாக உழைத்து பலனை எதிர்பார்க்க வேண்டும். பாடல்கள் கேட்பது திரைப்படம் பார்ப்பது போன்றவற்றின் மூலம் அமைதியடையுங்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடனான தகவல் பரிமாற்றத்தில் தடைகள் ஏற்படும். நீங்கள் இதனை கவனமாகக் கையாள வேண்டும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை கண்காணிக்க வேண்டியது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளால் அவதிப்படுவீர்கள்.

## கன்னி

இன்றுநீங்கள்புதியதொருவளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் தொழில்சார்ந்த அணுகுமுறை மூலம் வெற்றிகாணலாம்.

பணியில் பெயரையும் புகழையும் சம்பாதிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி மகிழ சாத்தியம் உள்ளது. இதனால் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது.

பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறந்தது.

## துலாம்

இன்று பயணங்கள் காணப்படுகின்றன. யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இசை விழாக்களில் பங்கு கொள்வது ஆறுதலைத் தரும்.

முறையான திட்டமிட்டு நேரத்தோடு செயல்பட்டால் எளிதாக பணியாற்றலாம்.

உறவில் கோபதாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் கவனமாகப் பழகுங்கள்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமானதாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.

## விருச்சிகம்

உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கண்காணிக்க வேண்டும். நேர்மறையான அணுகுமுறை வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இன்று பனியின் போது சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். மேலதிகார்கள் ஆதரவு அவ்வளவாக காணப்படாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் கவனமாக வெளிப்படுத்துங்கள்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களை வருத்ததிற்குள்ளாக்கும்

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். தூக்கமின்மை காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -17.10.2025




இன்று சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் அதுவும் உங்களுக்கு நல்லது.

இன்று பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. இன்று பணிச்சுமை காணப்படும். நீங்கள் அதனை சாமர்த்தியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் உறவில் பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இதனை சரி செய்தால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நிதியைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வு காணப்படும். பணத்தைக் கையாளும்போது கவனம் தேவை.

இன்று குளிர்ந்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்றைய நாளை உங்கள் சுய வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். நேர்மையான முயற்சிகளால் விரும்பும் பலன்களை அடையலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களின் செலவிற்கான பணம்உங்களுக்கு கிடைக்கும். மங்களகரமான நிகழ்சிகளுக்கு பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் முயற்சியும் தன்னம்பிக்கையும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களைப் பார்த்து புன்னகை பூக்கும். உங்கள் முயற்சிகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

குடும்பத்தில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் ஒற்றுமையாக பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலை சுதந்திரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியுடனும் தன்னம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகளைக் கையாளும்போது கவனம் தேவை.

நீங்கள் சிறிது குழம்பி காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இதனால் உறவில் சில அசௌகரியங்கள் ஏற்படும்.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. இன்று பணம் குறைந்த அளவில் காணப்படும்.

ஜீரணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

# சின்னத்தம்பனை மக்களைச் சந்தித்த சத்தியலிங்கம் எம்.பி.



வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் பூவரசங்குளம் வட்டாரத்திற்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமமக்களின் அழைப்பினையேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்றைய தினம் சின்னத்தம்பனை கிராமத்திற்கு விஜயம் செய்தமையுடன் பொதுநோக்கு மண்டபத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பிலும் ஈடுபட்டார்.

பல்வேறு பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இதன்போது மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. குறிப்பாக யானைகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள், யானை வேலியின் தேவைப்பாடு, அவசர வீதித் திருத்தங்கள், வீதி விளக்குகளின் தேவைப்பாடுகள் ஆகியன தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வனவள திணைக்களத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சின்னாலங்குளம் மற்றும் அதன் கீழான வயற்காணிகள் தொடர்பிலான பிரச்சினை பற்றி விசேடமாக மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், அந்த காணிகள், வயல்பகுதியை நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது பூவரசங்குளம் வட்டார பிரதேசசபை உறுப்பினர் ம.ரவீந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக்கிளை செயலாளர் ந.கருணாநிதி ஆகியோரும் இணைந்திருந்தனர்.